# ‘திராவிட மாடல் பாதையே சரியானது!’ - ஆளுங்கட்சிக்கு குட்டு வைத்த நீதிமன்றம்

திராவிட நாயகர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடந்த ஐந்தாண்டு கால திராவிட மாடல் ஆட்சி என்பது பல்வேறு துறைகளிலும் தமிழ்நாட்டில் ஒரு புதிய அளவுகோலை (பெஞ்ச்மார்க்) வகுத்தளித்துள்ளது. ஒருங்கிணைந்த - பரவலாக்கப்பட்ட - அனைவருக்கும் அனைத்தும் என்ற இலட்சியத்துடன் திராவிட முன்னேற்றக் கழக அரசு போட்டுள்ள பாதையை எவரும் மீற முடியாது என்பதை, தட்டுத் தடுமாறும் த.வெ.க. அரசின் போலி விளம்பரங்கள் மெய்ப்பிக்கின்றன.

**நடிகர் விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் நிறைவடைகின்றன. இனியும் தேனிலவுக் காலம் என்று சொல்லி மக்களை ஏமாற்ற முடியாது. தேனிலவு - பால்நிலவு எல்லாம் அகமும் புறமுமாக முடிந்துவிட்டது. அதை விஜய் தரப்பினரும் உணர்ந்திருப்பதால்தான், ஆட்சிக்கு வந்து என்னச் செய்தீர்கள் என்ற மக்களின் கேள்விக்கு நேரடியாகப் பதில் அளிக்க முடியாமல் திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் மீது ஸ்டிக்கர் ஒட்டும் வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள்.**

100 நாள்களில் 1 இலட்சம் கோடி தொழில் முதலீடு என்பதுதான் அவர்களின் லேட்டஸ்ட் ஸ்டிக்கர். 2021-26 திராவிட மாடல் ஆட்சியில் 12இலட்சத்து 54ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள 1190 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, அதன் மூலமாக 36இலட்சத்து 6 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 60%க்கு மேல் செயல்பாட்டுக்கு வந்தன. 2024ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டில் ஒப்பந்தம் போட்ட வியட்நாம் நாட்டின் புகழ்பெற்ற வின்ஃபாஸ்ட் நிறுவனம் ஒன்றரை ஆண்டுக்குள்ளாகத் தூத்துக்குடி மாவட்டத்தில் தனது உற்பத்தியைத் தொடங்கியதுடன், அதே மாவட்டத்தைச் சேர்ந்த 200 பேருக்கு வேலைவாய்ப்பையும் அளித்தது. இத்தகைய சாதனை முயற்சிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியதுதான் திராவிட மாடல் அரசு.

**உலகின் முன்னணி நிறுவனங்கள் பலவும் திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு ஆர்வம் காட்டின. தி.மு.க.வின் 5 ஆண்டுகால ஆட்சியில் முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவில் 3வது இடத்தில் இருந்த தமிழ்நாடு, த.வெ.க ஆட்சி அமைந்த பிறகு 16வது இடத்திற்குப் பின்தங்கிவிட்டது. நிர்வாகத் திறனற்ற முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் கேலிக்கூத்தான செயல்பாடுகள், ரீல்ஸ்கள், மோசமான அணுகுமுறைகள் - இவைதான் இந்த வீழ்ச்சிக்குக் காரணமாகும்**. இதனை மறைப்பதற்காக திடுதிப்பென ஒரு முதலீட்டாளர் மாநாட்டை, ஆகஸ்ட் 13 அன்று ஏற்பாடு செய்து, அதில் 1 இலட்சம் கோடி முதலீடுகளை ஈர்த்ததாக விஜய் அரசு விளம்பரத் தம்பட்டம் அடித்தது.

**உண்மையில், த.வெ.க ஆட்சியால் ஈர்க்கப்பட்ட முதலீடுகள் என்பவை வெறும் 30% கூட இல்லை. போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலீடாக மாறுமா என்பதற்கும் உத்தரவாதமில்லை. 70% முதலீடுகள் கடந்த திராவிட மாடல் ஆட்சியில் போடப்பட்ட வலுவான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வழியே ஈர்க்கப்பட்டவைதான் என்பதை ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியிருக்கிறார், கழக ஆட்சியில் தொழில்துறை அமைச்சராக இருந்த அன்புச் சகோதரர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா.**

மிகத் தெளிவான புள்ளிவிவரங்கள் வெளிப்பட்டுள்ளன. இதன் மூலம், திராவிட மாடல் ஆட்சியில் போடப்பட்ட பாதையில்தான் தொழில்துறை முதலீடுகளை த.வெ.க. அரசு ஈர்க்கிறது என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

தி.மு.க. ஆட்சி மீது பழிசுமத்தி பெயர் வாங்கலாம் என்றுதான் த.வெ.க அரசு திட்டமிட்டது. அதைச் செயல்படுத்த, அறநிலையத்துறையைப் பயன்படுத்த நினைத்தது. கோயில் சொத்துகள் கோயிலுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று த.வெ.க.வின் அறநிலையத்துறை அமைச்சரான 100 கோடி பழனி கோயில் நில ஊழல் புகழ் **‘முறுக்கு’ ரமேஷ்** தெரிவித்தார். அதாவது, திராவிட மாடல் ஆட்சியில் அறநிலையத்துறை சார்பில் அரசு கலைஅறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் த.வெ.க அமைச்சரின் கருத்து வெளிப்பட்டது.

அறநிலையத்துறை சார்பில் கல்லூரிகள் தொடங்குவது என்பது இப்போது த.வெ.க கூட்டணி அமைச்சரவையில் பங்கேற்றுள்ள காங்கிரஸ், தமிழ்நாட்டில் ஆட்சி செய்த காலத்திலிருந்தே நடைமுறையில் உள்ளது. குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி, பழனியாண்டவர் கலைக் கல்லூரி ஆகியவை பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்தபோது தொடங்கப்பட்டவை. அ.தி.மு.க ஆட்சிக்காலத்திலும் அறநிலையத்துறை சார்பில் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. ஏற்கனவே தொடங்கப்பட்ட கல்லூரிகள் விரிவாக்கம் செய்யப்பட்டன. எனினும், பா.ஜ.க. பாணியில், அதன் ‘பி டீமான’ த.வெ.க. அரசு திராவிட மாடல் ஆட்சியை மட்டுமே குறிவைத்துப் பழி சுமத்தியது. அறநிலையத்துறை சார்பில் திட்டமிடப்பட்டிருந்த கல்லூரிகளுக்கு எதிராகச் செயல்பட்டது.



**கோவி.லெனின்**
**தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்**

இந்நிலையில், **அறநிலையத்துறை சார்பில் கல்லூரிகள் தொடங்கப்படுவதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த, நீதிபதிகள் ஜெயச்சந்திரன்மனோகரன் அடங்கிய அமர்வு, “கோயில் நிதியைக் கல்விக்காகப் பயன்படுத்தலாம்” என உத்தரவிட்டது. திராவிட இயக்கத்தின் முதல் அரசியல் அமைப்பான நீதிக்கட்சி ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திருக்கோயில்கள் தொடர்பான அறநிலையச் சட்டத்தின் நோக்கத்தை உயர்நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. இதன் மூலம், திராவிட மாடல் பயணிக்கும் பாதை சரியானது என்பதை த.வெ.க அரசுக்கு குட்டு வைத்து உணர்த்தியுள்ளது நீதிமன்றம்.**

மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைக்கின்ற நீட் தேர்வைத் தொடக்கம் முதலே எதிர்த்து வருகின்ற இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம். நேரடிக் களத்திலும், சட்டப் போராட்டங்கள் வழியாகவும் ‘நீட்’ எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தி.மு.க தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. ஆட்சி செய்யும் வாய்ப்பை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள் வழங்கியபோது, சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன், நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்குக் கோரும் சட்ட முன்வரைவை நிறைவேற்றி, ஆளுநருக்கு அனுப்பி வைத்தார். ஆனாலும், ஒன்றிய வஞ்சக பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டு மக்கள் பிரதிநிதிகளின் ஒட்டுமொத்த உணர்வைப் புறக்கணித்து, தமிழ் மாணவர்களுக்குப் பெரும் துரோகத்தை இழைத்தது.

இந்தத் துரோகத்தைக் கண்டித்து தி.மு.க. பல போராட்டங்களை நடத்தியது. **துணை முதலமைச்சர் பொறுப்பை வகித்த கழகத்தின் இளம்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தன் பதவிப் பற்றித் துளியும் கவலைப்படாமல் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்று, ஆளுநரின் மக்கள் விரோதச் செயலைக் கண்டித்து உரையாற்றினார். இதுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.**

தி.மு.க.வின் தாய்க்கழகமான திராவிடர் கழகம், நீட் தேர்வைத் தொடர்ந்து எதிர்த்துப் பரப்புரை செய்து வருகிறது. திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா கி.வீரமணி அவர்கள் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் தமிழ்நாடு தழுவிய நீட் எதிர்ப்புப் பரப்புரைப் பயணத்தை மேற்கொண்டு, மக்களிடம் விழிப்புணர்வூட்டினார். அந்தப் பயணத்தின் நிறைவு நிகழ்வில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று, தந்தை பெரியாரைப் போல வயது பற்றிக் கவலைப்படாமல் பொதுத் தொண்டாற்றி வரும் ஆசிரியன் அரும் பணியை வாழ்த்தினார்.

**தந்தை பெரியாரை தனது கொள்கைத் தலைவர் என்று லேபிள் ஒட்டியிருக்கும் த.வெ.க.வின் ஆட்சியில், நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாடு தழுவிய அளவில் திராவிடர் கழகம் மேற்கொள்ளவிருந்த வாகனப் பரப்புரைக்கு, விஜய் அரசு கடைசி நேரத்தில் தடை போட்டதுடன், கொள்கைத் தலைவராக பெரியார் பெயரிலான திடலில் போலீஸ் படையைக் குவித்து, தன்னைப் ‘பா.ஜ.க.வின் பி டீம்’ என்று நிரூபித்திருக்கிறது.** தடைக்கு எதிராக திராவிடர் கழகத்தின் சார்பில் அதன் துணைத்தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் அவர்கள் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த **நீதிபதி லட்சுமிநாராயணன் அவர்கள், “கருத்துரிமை, பேச்சுரிமை போல போராடுவதும் அடிப்படை உரிமை. நீட் தேர்வுக்கு எதிராக இருசக்கர வாகனப் பேரணியை முடக்குவது ஏன்? ஹெலிகாப்டரில் சென்று போராட முடியுமா?” என்று கேட்டதுடன், காவல்துறை உரிய பதிலளிக்க உத்தரவிட்டுள்ளார்.**

நீட் தேர்வு எதிர்ப்பு என்பது தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த உணர்வு. நீட் தேர்வை ஆதரிப்பது பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் சங்கிக் கூட்டமே. அந்தக் கூட்டத்தில் ஒருவர்தான் என்று த.வெ.க தன்னை அடையாளப்படுத்தியுள்ளது. ஆர்.எஸ்.எஸ். பின்னணி கொண்ட நிர்மல்குமார், அருண்ராஜ் போன்றவர்கள் த.வெ.க.வில் சேர்ந்ததும், அவர்கள் அமைச்சர்களாகியிருப்பதும் எதேச்சையானது அல்ல. இது திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் செயல்முறையாகும்.

**பெரியார், அண்ணா என்று த.வெ.க.வினர் உதட்டளவில் பேசினாலும் அவர்கள் ஆர்.எஸ்.எஸ்.பா.ஜ.க. செயல்திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் போட்டிருக்கும் வேடம்தான் அது என்பது அறநிலையத்துறை சார்பில் கட்டப்படும் கல்லூரிகளுக்கு எதிரான நிலைப்பாடும், நீட் தேர்வை எதிர்க்கும் திராவிடர் கழகத்தின் பரப்புரை மற்றும் இளம் தலைமுறையின் போராட்டம் ஆகியவற்றை போலீஸ் படையைக் கொண்டு முடக்கும் நடவடிக்கைகள் மூலமாகவும் வெட்ட வெளிச்சமாகிவிட்டது.**

ஆர்.எஸ்.,எஸ்பா.ஜ.க. நோக்கங்களை நிறைவேற்றும் பசுத்தோல் போர்த்திய புலிதான் விஜய் நடத்தும் த.வெ.க. எனும் நாடகக் கம்பெனி. அந்தப் புலிக்குப் பல்லும் பிடுங்கப்பட்டு விட்டது. நகமும் வெட்டப்பட்டுவிட்டது.

---

தமிழ்நாட்டின் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் ஆட்சேபனைகள் –

## மாநிலத்தின் முன்மொழிவுகள் இருந்தும் ஒப்புதல் தாமதம் ஏன்!

### மக்களவையில் கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஆக.17-

ஈரோடு மக்களவைத் தொகுதி உறுப்பினர் கே.இ. பிரகாஷ் அவர்கள், கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் திட்டங்களை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறு அறிக்கைகளுடன் கூடிய முன்மொழிவுகளை தமிழ்நாடு அரசு சமர்ப்பித்துள்ளதா என்றும், அவ்வாறு சமர்ப்பித்திருந்தால் அதன் விவரங்கள் என்ன என்றும்; மேற்கண்ட முன்மொழிவுகள் மெட்ரோ ரயில் கொள்கை, 2017-ன் கீழ் ஒன்றிய அரசால் பரிசீலிக்கப்பட்டுள்ளதா என்றும், அவ்வாறு பரிசீலிக்கப்பட்டிருந்தால் அதன் விவரங்கள் மற்றும் தற்போதைய நிலை என்ன என்றும்;

மேற்கண்ட முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் வழங்கப்படவில்லையெனில், மக்கள் தொகை, எதிர்பார்க்கப்படும் பயணிகள் எண்ணிக்கை, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் நகர்ப்புறப் போக்குவரத்து ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு பின்பற்றப்



பட்ட அளவுகோல்களைப் பயன்படுத்தியதற்கான காரணங்கள் என்ன என்றும்: செய்வதற்காகப் கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் ஒத்த மக்கள் தொகை கொண்ட நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளதா என்றும், அவ்வாறு அளித்திருந்தால் அதன் விவரங்கள் என்ன என்றும்; வளர்ந்து வரும் இரண்டாம் நிலை தொழில் நகரங்கள் மற்றும் மேற்கு தமிழ்நாடு உள்ளிட்ட பிராந்திய வளர்ச்சி வழித்தடங்களின் அதிகரித்து வரும் பொருளாதார முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, வெகுஜன விரைவுப் போக்குவரத்து அமைப்பு திட்டங்களை செயல்படுத்துவதற்கு தற்போதுள்ள மதிப்பீட்டு கட்டமைப்பை மறுஆய்வு செய்ய அரசு முன்மொழிகிறதா என்றும்: மேலும், அதிகரித்து வரும் நகர்ப்புறப் போக்குவரத்து தேவை. தொழில்துறை வளர்ச்சி, சுற்றுலா வாய்ப்புகள் மற்றும் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் பெருமளவிலான யாத்திரிகர்கள் வருகை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மேற்கண்ட மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்க அரசு முன்மொழிகிறதா என்றும், அவ்வாறு முன்மொழிந்திருந்தால் அதன் விவரங்கள் என்ன என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்?

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் பின்வருமாறு பதிலளித்துள்ளது**

(அ) முதல் (ஊ) வரை: ஒரு அறிக்கை அவையின் மேசையில் வைக்கப்பட்டுள்ளது.

“தமிழ்நாட்டில் மெட்ரோ ரயில் திட்டங்களின் நிலை தொடர்பாக, ஈரோடு மக்களவைத் தொகுதி உறுப்பினர் திரு. கே. இ பிரகாஷ் அவர்கள் கேட்ட 13.08.2026 அன்று பதிலளிக்க வேண்டிய மக்களவை நட்சத்திரக் கேள்வி எண் 361-ன் (நிலை 3) (அ) முதல் (ஊ) வரையிலான பகுதிகளுக்கான பதிலுடன் தொடர்புடைய அறிக்கை

(அ): தமிழ்நாடு அரசு, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் முறையே 34.8 கி.மீ. மற்றும் 32 கி.மீ. நீளமுள்ள மெட்ரோ ரயில் திட்டங்களுக்கான CMP மற்றும் DPR ஆகியவற்றுடன் கூடிய முன்மொழிவு களை டிசம்பர் 2024-ல் சமர்ப்பித்துள்ளது.

(ஆ) மற்றும் (இ): மெட்ரோ ரயில் கொள்கை, 2017 மற்றும் நடைமுறையில் உள்ள கொள்கை வழிகாட்டுதல்களுக்கு இணங்க, இந்த முன்மொழிவுகள் ஒன்றிய அரசால் பரிசீலிக்கப்பட்டுள்ளன. ஒன்றிய அரசின் ஆட்சேபனைகள் மாநில அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. அரசின் ஆட்சேபனைகளுக்கு பதிலளிக்கும் வகையில் மாநில அரசு தனது பதிலை சமர்ப்பித்துள்ளது. மாநில அரசின் பதிலுக்கு எதிரான இந்திய அரசின் கூடுதல் ஆட்சேபனைகள் மாநில அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்திய அரசின் முக்கிய ஆட்சேபனைகள் பின்வருமாறு

**கோயம்புத்தூர்**

i. குறைந்த சராசரி பயணத் தூரம் மற்றும் சாலைகளில் நிலவும் சராசரி வேகத்தை கருத்தில் கொள்ளும்போது. பயண நேரத்தில் மிகக் குறைந்த சேமிப்பு மட்டுமே இருப்பதால், மெட்ரோ அமைப்பிற்கு போக்குவரத்து மாறும் என எதிர்பார்க்கப்படவில்லை.

ii. கோயம்புத்தூர் மாநகராட்சி (CMC) பகுதிக்கு கூடுதலாக, உள்ளூர் திட்டமிடல் பகுதியின் (LPA) மக்கள் தொகையும் மெட்ரோ அமைப்பால் சேவை பெறும் பகுதியாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. LPA-வில் வசிக்கும் மக்கள் மெட்ரோ அமைப்பைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளது. ஏனெனில் இந்தத் திட்டம் முக்கியமாக CMC பகுதியைச் சேவை செய்கிறது.

iii கோயம்புத்தூர் மெட்ரோவின் வலையமைப்பிற்கு நாளொன்றுக்கு முன்மொழியப்பட்ட 5.9 34 கி.மீ. லட்சம் பயணிகள் கணிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை, அதிக மக்கள் தொகைக்கு சேவை செய்து வரும் சென்னை மெட்ரோ முதல் கட்டத்தின் 5410 கி.மீ. இயக்கத்தில் உள்ள வலையமைப்பில் நாளொன்றுக்கு 4 வட்சம் என்ற உண்மையான பயணிகள் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் அதிகமாக உள்ளது. எனவே, DPR-ல் கணிக்கப்பட்டுள்ள பயணிகள் எண்ணிக்கை யதார்த்தமானதாக இல்லை.

iv. பல இடங்களில் போதுமான வழித்தட உரிமை (RoW) கிடைக்காததால். கட்டுமானப் பணிகளின்போது கட்டிடங்களை இடிக்கும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

**மதுரை**

தமிழ்நாடு அரசு (GoTN) சமர்ப்பித்துள்ள விரிவான போக்குவரத்து திட்டத்தில் (CMP), தற்போதைய பயணிகள் எண்ணிக்கை பேருந்து விரைவுப் போக்குவரத்து அமைப்பிற்கு (BRTS) நியாயமானதாக உள்ளது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஈ): திட்டத்தின் ஒப்புதல், முன்மொழிவுகளை முழுமையாகப் பரிசீலித்த பின்னரே வழங்கப்படுகிறது (ஒரு அளவுகோலை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அவசியமில்லை). இருப்பினும், அது எப்போதும் முன்மொழிவின் சாத்தியக்கூறு மற்றும் வளங்களின் இருப்பைப் பொறுத்தே அமையும். கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒத்த மக்கள் தொகையைக் கொண்ட நகரங்களில் இந்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மெட்ரோ திட்டங்களின் விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளன (இணைப்பு-1).

(உ) மற்றும் (ஊ): ‘நகர்ப்புறத் திட்டமிடல்’ என்பது மாநிலப் பொருளாகும்.

எனவே, நகர்ப்புற உள்கட்டமைப்பு மெட்ரோ திட்டங்களின் மேம்பாட்டிற்கான திட்டமிடல், முன்மொழிவுகளைத் தொடங்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு சம்பந்தப்பட்ட மாநில அரசுகளே பொறுப்பாகும். சம்பந்தப்பட்ட மாநில அரசு முன்மொழிவை சமர்ப்பிக்கும் போது, அதன் சாத்தியக்கூறு மற்றும் வளங்களின் இருப்பைப் பொறுத்து, மெட்ரோ ரயில் கொள்கை, 2017-ன் விதிகளின்படி ஒன்றிய அரசு மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குகிறது. மெட்ரோ திட்டங்கள் அதிக செலவினம் கொண்டவை என்பதால், நீண்டகால நிலைத்தன்மையை உறுதி செய்ய அவை கவனமாகத் திட்டமிடப்பட வேண்டும். இந்தப் பின்னணியில், நடைமுறையில் உள்ள கொள்கை வழிகாட்டுதல்களின் அடிப்படையில், மெட்ரோ திட்டங்கள் ஒன்றிய அரசின் பல்வேறு நிலைகளில் தீவிரமான பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஏ. மதியழகன்
### ஆகஸ்ட் 17 (1983)



**தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் வழிநடந்த தன்மான தளகர்த்தர். தலைவர் கலைஞர் அவர்களது உடன்பிறப்பு, நாற்பதாண்டு காலத்திற்கு மேலாக திராவிடர் நலம்நாடி உழைத்த பெருமகனார்.**

**இயக்கப் பணியிலும், அறப்போராட்டத்திலும் முன்னின்று செயலாற்றி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கியவர்.**


**தமிழக அமைச்சராகவும், சட்டப்பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**“தமிழ் இனம் காக்க – மொழி காக்க தடந்தோள் உயர்த்திய தளபதி” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.பி. பச்சையப்பன்
### ஆகஸ்ட் 16 (2022)



**தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**1964ஆம் ஆண்டு கள்ளக்குறிச்சி வட்டச் செயலாளராகவும், அதனை தொடர்ந்து 1991 வரை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**1967ல் சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதியில், கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**ஒன்றிய பெருந்தலைவராகவும் , பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் தலைவராகவும் இருந்தவர்.**

**1964ல் கடலூரில் இந்தி எதிர்ப்பு அறப்போரில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**